**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.81/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Manikandan | Prosecution | P.W-1, L.W-1 |
| Father Name | Ganesan | Defence | |
| Village | Valluvakudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 47/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **13.08.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது வீட்டின் பின்புறத்தில் வசித்து வருகிறார்கள். கடந்த 1.10.2021 ம் தேதி காலை 8.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது வீட்டு பின்புறம் என் மனைவியிடம் ஆஜர் எதிரிகள் தகராறு செய்து கொண்டிருந்தார்கள். நான் சத்தம் கேட்டு கொல்லைப்பின்புறம் சென்று பார்த்தபோது குணசேகரன், கோதண்டராமன் இருவரும் வேலியை பிரித்து கொண்டிருந்தார்கள். ஏன் வேலியை பிரிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு குணசேகரன், குச்சிகாரி தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டினார். கொல்லையில் கிடந்த கட்டையை எடுத்து குணசேகரன் எனது பின்புற தோள்பட்டையில் அடித்தார். கோதண்டராமன் இரும்பு ராடால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதில் ரத்தம் வந்து மயங்கிவிட்டேன். பின்னர் எதிரிகள் இருவரும் என் மீது ஏறி அமர்ந்து கொண்டனர். பின்னர் என் மனைவி சுதா, சரிதா , மற்றும் வசந்தி ஆகியோர் வந்து அவர்களை விலக்கி என்னை சீர்காழி அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சுப்பிரமணியும் என் மனைவியும் அழைத்து சென்று என்னை சிகிச்சைக்கு சேரத்தனர். அங்கிருந்து மேல்சிகிச்சைக்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கிருந்து மீண்டும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு வந்து ஒரு வார காலம் தங்கி சிகிச்சை எடுத்து கொண்டேன். எனக்கு தலையில் 3 தையல்கள் போடப்பட்டன. நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ .1**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்யாததால் ஒத்திவைக்கப்படுகிறது.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.81/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Subramaniyan | Prosecution | P.W-2, L.W-2 |
| Father Name | Rajagopal | Defence | |
| Village | Valluvakudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 44/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>13.08.2024.</u>**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். அ.சா. 1 எனது ஊர்க்காரர். கடந்த 1.10.2021 ம் தேதி காலை 9.00 மணியளவில் நான் வள்ளுவக்குடி டீக்கடைக்கு டீ குடிக்க சென்றபோது அ.சா.1 க்கும் குணசேகரனுக்கும் தகராறு நடந்ததாகவும் அதில் அ.சா.1 மணிகண்டனுக்கு மண்டை உடைந்ததாகவும் பேசிக்கொண்டிருந்தார்கள். தகவல் தெரிந்து உடனே இருசக்கர வாகனத்தில் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அ.சா.1 மணிகண்டனை பார்க்க சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்யாததால் ஒத்திவைக்கப்படுகிறது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.81/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Sutha | Prosecution | P.W-3, L.W-3 |
| Husband Name | Manikandan | Defence | |
| Village | Valluvakudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 39/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **13.08.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது வீட்டின் பின்புறத்தில் வசிதது வருகிறார்கள். கடந்த 1.10.2021 ம் தேதி காலை 9.00 மணியளவில் கோதண்டராமன் அவரது அப்பா மற்றும் அம்மா மூவரும் கொல்லைப்புறத்தில் உள்ள எங்கள் வீட்டு வேலியை பிரிதது கொண்டிருந்தார்கள். நான் சென்று கேட்டபோது என்னிடம் அசிங்கமாக திட்டினார்கள். கல் மற்றும் தேங்காய் சரடால் என்னை தாக்கினார்கள். சத்தம் கேட்டு என் கணவர் வந்து ஏன் வேலியை பிரிக்கிறீரகள் என்று கேட்டதற்கு கோதண்டராமன் இரும்பு ராடால் என் கணவரை தலையில் அடித்தும், குணசேகரன் கட்டையால் உடம்பு முழுவதும் அடித்தும் தாக்கினார்கள். சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஒன்று கூடிவிட்டார்கள். என் கணவர் தலையில் இருந்து ரத்தம் வழிந்தது. எனது ஊரை சேர்ந்த சுப்ரமணி மற்றும் என் நாத்தனார் உதவியுடன் என் கணவரை சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு 9 நாட்கள் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை எடுத்து கொண்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்யாததால் ஒத்திவைக்கப்படுகிறது.**